பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

7. எந்த ஒரு உள்ளாட்சிப் பகுதிக்குள்ளும், உபயோகம் மற்றும் விற்பனையின் பொருட்டு எந்த ஒரு மோட்டார் வண்டியின் நுழைவிற்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2-12-1991 ஆம் நாளிட்ட 482-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

8. வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், கரிகிரியிலுள்ள திருவாளர்கள் ஷெஃப்ளின் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தினர் அவர்களால் சிறிய பேருந்து ஒன்று வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1991 ஆம் நாளிட்ட 257-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

9. வேளாங்கண்ணி, திருவாளர்கள் மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி அவர்களால் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1991 ஆம் நாளிட்ட 256-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

10. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் வாணிபக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

11. 1990-91–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பதினேழாவது ஆண்டு அறிக்கை.[1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956–619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது,] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.